# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



## திமிரி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள்
## பிறப்பிப்பவர் : திரு. தி. சரவணன்

ந.க.எண். 189/ 2023/அ2

நாள். 06.02.2024

பொருள்: மனைப்பிரிவு ஒப்புதல் – பேரூராட்சிகள் நிர்வாகம் – வேலூர் மண்டலம் – ராணிப்பேட்டை மாவட்டம் – ஆற்காடு வட்டம் – திமிரி சிறப்புநிலை பேரூராட்சி – வார்டு எண்.15–ல் கலவை ரோடு தொகுப்பு வீடு அருகில் அமைந்துள்ள மனைப்பிரிவு சர்வே எண். 431A/5, 6B, 7–ல் 7729.43ச.மீ (அ) 83199.60 ச.அடி (அ) 1.91 ஏக்கர் உள்ள இடத்தில் அமைத்துள்ள குடியிருப்புக்கான உத்தேச மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து வரப்பெற்றது – குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகரித்து உத்தரவு பிறப்பித்தல் – சார்பு

பார்வை :

1. இணை இயக்குநர்/ உதவி இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் **விண்ணப்ப எண். A5POVHJV/2022/TCP Date.22.5.2023** and வரன்முறைப்படுத்துதல் எண். **SWP / DTCP / RANIPET / LAYOUT NO: 64/2023**
2. திரு.க.மணி த/பெ.கண்ணன், எண்.5, கலவை ரோடு, திமிரி என்பவரது விண்ணப்ப நாள்.05.06.2023
3. சாலை மற்றும் பொது இடம் பேரூராட்சிக்கு ஒப்படைத்து ஆற்காடு சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2089/2023 நாள்.25.03.2023
4. திமிரி பேரூராட்சி மன்ற தீர்மான எண்.78 நாள்.19.06.2023
5. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.189/2023/அ2 நாள்.20.06.2023
6. தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகம். திமிரிக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.189/2023/அ2 நாள்.25.10.2022
7. ஆற்காடு சார்பதிவாளர் அலுவலர் அவர்களின் கடித ந.க.எண்.319/2023 நாள்.05.07.2023
8. மின்வாரியம், திமிரியில் இணையதளம் மூலம் பதிவு செய்து நாள்.17.10.2023
9. இளநிலை பொறியாளர், திமிரி பேரூராட்சி அவர்களின் ஆய்வு அறிக்கை நாள்.19.01.2024.
10. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.3) துறை நாள்.4.5.2017–ன்படி Land Use Conversion Charge செலுத்திய சலான் எண்.20240203000393 நாள்.03.02.2023
11. பல்வகை இரசீது எண். 222 /2023–2024 நாள். 06.02.2024
12. தொடர்புடைய ஆவணங்கள்.

**********

**உத்திரவு:-**

ராணிப்பேட்டை மாவட்டம், திமிரி சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் கலவை ரோடு, தொகுப்பு வீடு அருகில் சர்வே எண்.431A/5, 6B, 7–ல் 7729.43ச.மீ (அ) 83199.60 ச.அடி (அ) 1.91 ஏக்கர் உள்ள இடத்தில் திரு.க.மணி, எண்.5, கலவைரோடு, திமிரி என்பவருக்கு

பொது அதிகார ஆவண பத்திரத்தின் படி பதிவு செய்து கொடுத்த இடத்தில் மனைப்பிரிவு அமைப்பதற்கு விண்ணப்பித்துள்ளார்.

பார்வை 1ல் காணும் ராணிப்பேட்டை மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு/ சாலை/ பூங்கா இடங்களை பேரூராட்சிக்கு தானமாக வழங்கி பத்திர பதிவு செய்து பார்வை 3ல் காணும் தானப்பத்திரன்படி மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி குடியிருப்பு மனைப்பிரிவில் சாலை மேம்பாடு, வடிகால் வசதி ஆகிய அடிப்படை வசதிகளை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து கொடுத்துள்ளார்.

அதனை தொடர்ந்து , மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கி பார்வை 2ல் காணும் கடிதத்தில் வரைபடத்தை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் தொகை ரூ.3,43,838/—ஐ Indian Bank, Thimiri என்ற வங்கி வரைவோலை எண்.950912 நாள் 03.02.2023ல் இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் , பார்வை 4ல் காணும் இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் மேற்படி மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்படி சர்வே எண்.431A/5, 6B, 7—ல் 7729.43ச.மீ (அ) 83199.60 ச.அடி (அ) 1.91 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் கண்டுள்ளப்படி 42 குடியிருப்பு மனைகள் அமைத்துள்ள மனைப்பிரிவாக அங்கீகரித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. மேற்படி மனைப்பிரிவு அங்கீகாரத்தை உயர் அதிகாரிகள் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் அவர்கள் மூலம் ரத்து செய்ய உத்திரவு பிறப்பித்தால் உடனே மனைப்பிரிவு அங்கீகாரம் ரத்து செய்யப்படும்
2. இம்மனைப்பிரிவு சம்மந்தமாக பொது மக்களின் நன்மையை கருதி அவ்வப்போது பேரூராட்சியினால் பிறப்பிக்கப்படும் உத்திரவுகளுக்க மனைப்பிரிவுதாரர் கட்டுப்பட்டவராவார்.
3. தமிழக அரசு ஆணை எண் 130 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.06.1999 ( அரசு ஆணை எண் 79 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 16.06.2000) அரசுக் கடிதம் எண் 26331/ ந.நி.99—8 நாள் 16.06.2000 ஆகியவற்றில் கண்டுள்ள அனைத்து சட்ட பிரிவுகளுக்கும் 1920ம் ஆண்டின் மாவட்ட நகராட்சிகள் சட்ட விதிகளுக்கும் மற்றும் 1994ம் வருடத்திய நகரமைப்பு சட்டப்பிரிவுகளின் மனைப்பிரிவு விதிமுறைகளுக்கும் மனைப்பிரிவு தாரர் கட்டுப்பட்டவராவார்.
4. இணை இயக்குநர்/ உதவி இயக்குநர் (பொ.) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ராணிப்பேட்டை அவர்களின் வரைபடத்திற்கு வரன்முறைப்படுத்துதல் எண். **SWP / DTCP / RANIPET / LAYOUT NO:** 64/2023 என எண்ணிடப்பட்டும், இணையதள விண்ணப்ப எண்.

**A5POVHJV/2022/TCP Date.22.5.2023ல்** குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் மனைப்பிரிவுதாரர் கட்டுப்பட்டவராவார்.

5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்று மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலைஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி தானாக ரத்தாகிவிடும்.
6. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வலைரபடத்தை எந்த வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுவப்படவேண்டும்
8. மனுதாரர் மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள், பொது இடங்கள் மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகளை ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது
9. இம்மனைபிரிவு அங்கீகாரத்திற்கு செலுத்தப்பட்ட தொகை குறித்து பிற்காலத்தில் தணிக்கை தடை ஏதும் ஏற்பட்டால், அதற்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் எனவும், கேட்பு எழுப்பபட்டால் முழுதொகையினையும் செலுத்த வேண்டும்.

செயல் அலுவலர்
திமிரி சிறப்புநிலை பேரூராட்சி
ராணிப்பேட்டை மாவட்டம்

பெறுநர்

திரு. க. மணி த/பெ. கண்ணன்
எண்.5, கலவை ரோடு,
திமிரி.

நகல்:

1) சார் பதிவாளர் அவர்கள், ஆற்காடு
2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் ராணிப்பேட்டை மாவட்டம்



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate